# அதிர்ஷ்ட நம்பர்கள்

## த த் து வ ம்

**வாழ்க்கையின்**

**சுவை**

வாழ்வில் அதிருஷ்டசாலியாவதற்கு ஆசைப்படாதவர்கள் எவரும் இலர்! ஆனால், எல்லாருமே அதிருஷ்டசாலிகள் ஆகிவிடுவதில்லை. தம் வாழ்நாள் முழுவதுமே அதிருஷ்ட சாலிகளாக வாழ்ந்தவர்கள் எவரும் இலர். அதேபோல், முற்றிலும் துரதிருஷ்டசாலிகள் என்று சொல்லத் தக்கவர்களும் இலர்.

அதிருஷ்டமும் துரதிருஷ்டமும் மாறிமாறி வருகின்றன. ஒரு தனிமனிதனுடைய வாழ்வில் மட்டும் அல்ல; ஒரு குடும்பத்தின் வாழ்வு, ஒரு சமூகத்தின் வாழ்வு, ஒரு நாட்டின் வாழ்வு ஆகியவற்றிலுங்கூட இந்த முறை காணப்படுகிறது.

ஒரு காலத்தில் மொகலாயப் பேரரசு உலகு எங்கிலும் புகழ் பரப்பி விளங்கியது. அதற்கு முன்னர் விஜயநகரப் பேரரசு, அதற்கும் முன்னால் சேர சோழ பாண்டியர்களின் பேரரசுகள். அதே போல உரோமாபுரிப் பேரரசு, கிரேக்கப் பேரரசு. இந்தப் பேரரசுகள் எல்லாம் எங்கே போயின? என்ன ஆயின! இவற்றை நாம் இப்போது வரலாற்று நூல்களில் காணலாமே அன்றி, வாழ்க்கையில் காண முடிகிறதா?

ஆனானப்பட்ட பெரும் பேரரசுகளின் கதியே இப்படி ஆகிவிடும்போது, ஒரு தனிப்பட்ட மனிதனின் வாழ்வு மட்டும் என்றும் நிலையான அதிருஷ்டத்தோடு விளங்கிக் கொண் டிருக்கும் என்று எதிர்பார்க்க முடியுமா?

ஆனால்,

இந்தத் துன்பங்களும் துயரங்களும் நமக்கு அளவோடு தான் அளிக்கப்படுகின்றன. குழந்தையால் தாங்க முடிந்த அளவு காரமும் கசப்புந்தான், தாயால் ஊட்டப்படுகிறது. தாங்க முடியாத காரத்தையோ கசப்பையே தாய் ஊட்டுவ தில்லை. அதே போல, நம்மால் தாங்க முடியாத துன்பத் தையோ துயரத்தையோ இறைவன் நமக்கு அளிப்பதில்லை. இதற்கு மேல் நம்மால் தாங்க முடியாது என்னும் நிலைமை ஏற்படும் போது, அது வறுமையாய் இருக்கட்டும், அல்லது நோயாய் இருக்கட்டும், இறைவன் நம்முடைய வேண்டுகோளை எதிர்பாராமல் தானாகவே அதை மாற்றிவிடுகிறான் என்ற நம்பிக்கை நமக்கு இருப்பதில்லை. அதனாலேயே, துன்பத்தின் சுவைகளை நம்மால் அனுபவிக்க முடியாமல் போய்விடுகிறது.

அதாவது,

நமக்கு ஒரு சிறிய துன்பம் ஏற்படும்போதே, அதை எப்படி யாவது உடனடியாகப் போக்கிக்கொண்டுவிட வேண்டும் என்று நாம் துடிதுடிக்கிறோம். அதைப் போக்கிக்கொள்ள முடியாமல் போயவிடுமோ என்று அஞ்சுகிறோம். அப்படி முடியாமல் போய்விட்டால், நம்மால் அதைத் தாங்கிக் கொள்ள இயலுமா என்று தத்தளிக்கிறோம். கடைசி வரையில் அதைத் தாங்கிக் கொண்டே வாழவேண்டிய நிலைமை வந்துவிடுமோ என்று திகில் அடைகிறோம்.

இந்தத் துடிதுடிப்பும், அச்சமும், தத்தளிப்பும், திகிலும் தாம் உண்மையில் நம்மை வாட்டி வதைக்கின்றனவே தவிர, நமக்கு வந்துள்ள துன்பமோ துயரமோ நம்மை அவ்வளவாக வதைப்பது இல்லை. சுருக்கமாகச் சொன்னால், பாம்பு கடிப்ப தால் நாம் இறப்பதில்லை. அது பற்றிய பயத்தாலேயே இறந்துவிடுகிறோம். புலி நம்மை அடிப்பதில்லை. கிலிதான் அடித்துவிடுகிறது. பேறும் இழப்பும், புகழும்

இகழும், நோயும் நோயின்மையும் எல்லார் வாழ்விலும் இயல்பாக ஏற்படுகிற நிகழ்ச்சிகள். அவை நம்மை ஒன்றும் செய்துவிடுவதில்லை. அவற்றால் நாம் ஒருநாளும் பாதிக்கப் படுவதில்லை. உண்மையில் நம்முடைய மனத்தாலேயே நாம் பாதிக்கப்படுகிறோம்!

**துன்பத்திலும்**
**ஓர்**
**இன்பம்**
**இருக்கிறது**

நமக்கு வயது அறுபது அல்லது எழுபதுகூட ஆகி இருக் கலாம். ஆனால் நம்முடைய உள்ளம் மட்டும் இன்னும் பிள்ளைப் பிராயத்திலேயே இருக்கிறது. பிள்ளைகள் இனிப்புப் பண்டங்களுக்கு ஆசைப்படுவதுபோல், நாம் இன்பங்களுக்கு ஆசைப்படுகிறோம். பச்சைக் குழந்தையின் வாயில் சிறிது பக்கோடாத் தூளைப் போட்டால் அது அழுது கொண்டே துப்பிவிடுவதைப் போல, வாழ்வில் ஒரு சிறு துன்பம் வந்தால் கூட நாம் அதைப் பொறுக்க மாட்டாமல் அழத் தொடங்கு கிறோம். அத்துன்பத்திலிருந்து எப்படியாவது தப்பியோட முயலுகிறோம். அப்படி இல்லாமல் நாம் அந்தத் துன்பத்தை அமைதியாக ஏற்றுக்கொண்டு, துள்ளாமல், துடிக்காமல், அஞ்சாமல், அலறாமல், மனத்தைச் சாந்தப்படுத்தி அனுபவித்துப் பார்ப்போமானால், அந்தத் துன்பத்திலேயே நமக்கு ஒரு புதுமையான சுவை தெரியும். அதுவே, நம் உள்ளம் பக்குவப்பட்டு வருகிறது என்பதற்கு உரிய அடையாளம் ஆகும்.

காப்பியின் சுவை கசப்பு.

சட்னியின் சுவை காரம்.

இவ்விரண்டும் நம்மால் விரும்பி உட்கொள்ளப்படுவது போல, வாழ்வில் வருகிற பலவேறு வகையான துன்பங்

பஞ்ச பாண்டவர்களோடு ஆடிய சூதாட்டத்தில், துரியோதனன் வெற்றி பெற்றான். அந்த வெற்றிதான் அவனுடைய அழிவுக்கே காரணமாக அமைந்தது!

இரண்டாவது உலகப்போரில், ஜப்பானும் ஜெர்மனியும் தோல்வியுற்றன. அந்த நாடுகளில் இன்று காணப்படுகிற நிம்மதியான பொருளாதாரச் செழிப்புக்கு, அவை அடைந்த தோல்விதான் காரணம் என்பது பல பேருக்குத் தெரியாது!

எனவே,

ஒரு குறிப்பிட்ட காரியத்தில் நாம் வெற்றி அடைகிறோமா தோல்வி அடைகிறோமா என்பது ஒரு பொருட்டே அல்ல. நாம் நன்மை அடைகிறோமா, தீமை அடைகிறோமா என்பது தான் நாம் சிந்திக்க வேண்டிய சங்கதி. தீமையைத் தரக்கூடிய ஒரு வெற்றியைக் காட்டிலும், நன்மையைத் தரக்கூடிய தோல்வியே மேலானது, அல்லவா? அதனால்தான் அறிவுடைய பெருமக்கள் வெற்றியைக் கண்டு துள்ளுவதில்லை! தோல்வியைக் கண்டு துவளுவது இல்லை!

சூதாட்டத்தில் துரியோதனன் தோல்வியுற்றிருப்பானானால், அவனும் அவன் உடன் பிறந்தார்களும் அப்படிப் பூண்டோடு அழிந்திருக்க மாட்டார்கள், வாழ்ந்திருப்பார்கள்!

சீதையைக் கடத்திச் செல்லும் முயற்சியில் இராவணன் தோல்வியுற்றிருப்பானானால், அவனும் அவனது துணைவர்களும் அப்படி அடியோடு அழிந்திருக்க மாட்டார்கள். வாழ்ந்திருப்பார்கள்!

சூதாட்டத்தில் வெற்றி பெற்றபோது, துரியோதனன் உள்ளம் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்திருக்கும்?

சீதையைக் கடத்திச் சென்ற போது, இராவணன் உள்ளம் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்திருக்கும்?

தமது வெற்றிகளின் பின் விளைவுகள் எப்படி இருக்கும் என்பதை அறிந்திருந்தால் அவர்கள் அப்படி மகிழ்ந்திருப் பார்களா? அல்லது அத்தகைய மகிழ்ச்சியை அடைவதற்கு ஆசைப்பட்டுத்தான் இருப்பார்களா?

நம்முடைய
அறிவு
பேரறிவு
அல்ல,
சிற்றறிவுதான்!

நாம் எல்லாரும் வாழ்க்கையில் அடிக்கடி மகிழ்ச்சி அடை வதற்கே ஆசைப்படுகிறோம். அந்த மகிழ்ச்சியின் பின் விளைவுகள் எப்படி இருக்கும் என்பதை நாம் எண்ணிப் பார்ப்பது இல்லை. அப்படியே எண்ணிப் பார்த்தாலும், அவை இப்படித் தான் இருக்கும் என்று திட்டவட்டமாகத் தீர்மானிக்கக்கூடிய பேரறிவு நமக்குக் கிடையாது. நாம் உலகப் புகழ்பெற்ற மேதைகளாக இருந்தாலுங்கூட, நம் முடைய அறிவு பேரறிவு அல்ல; சிற்றறிவுதான். இறைவன் ஒருவன் தான் பேரறிவாளன். அவன் ஒருவன் தான் நமது வெற்றி தோல்விகளின் பயன் இப்படி இப்படி இருக்கவேண்டும் என்பதை வகுத்து நடத்துபவன்.

இவற்றையெல்லாம் கருத்து ஊன்றிச் சிந்தித்துப் பார்க்கும் போது, 'நாம் எடுத்த காரியம் யாவினும் வெற்றியே அடைய வேண்டும்; நமக்குத் தோல்வியே வரக்கூடாது' என்று ஆசைப்படுவது எவ்வளவு பெரிய பேதைமை என்பது மிகத் தெளிவாகப் புலன் ஆகிறது அல்லவா? 'வெற்றி தோல்வி களைப்பற்றிச் சிந்திக்காதே; உன் கடமையைச் செய்' என்று கண்ணன் சொன்ன கீதை வாக்கியத்தின் உண்மைப் பொருள் இப்போது நமக்கு நன்கு விளங்குகிறது அல்லவா?

**நாம்**
**எல்லாரும்**
**இறைவன்**
**கைக் கருவிகள்!**

இந்தியாவுக்கு ஒரு கடல்பாதை கண்டுபிடிப்பதற்காகக் கொலம்பஸ் புறப்பட்டு வந்தார். ஆனால் அந்தப் பாதையை அவர் கடைசி வரையில் கண்டுபிடிக்கவில்லை. அதற்குப் பதிலாக, அமெரிக்கா என்னும் ஒரு புதிய கண்டத்தையே அவர் கண்டு பிடித்து விட்டார். அதனால் இன்றைக்கும் அவருடைய பெயர் அழியாப் புகழுடன் விளங்குகிறது!

இதை நாம் சற்று ஆழ்ந்து சிந்திக்கவேண்டும்.

அதாவது,

கொலம்பஸ் ஆசைப்பட்டது இந்தியாவுக்கு வழி கண்டு பிடிக்க. அந்த முயற்சியிலே அவர் அடைந்தது ஒரு பெரும் தோல்வி. எனினும், அந்தத் தோல்விதான் அவருக்குப் புகழைத் தேடித்தந்தது. அப்படி இல்லாமல், அவர் வெற்றி அடைந்திருந்தால், அமெரிக்காவைக் கண்டுபிடித்த பெருமையும் பெயரும் புகழும் அவருக்கு வந்திருக்க மாட்டா.

இதிலிருந்து என்ன தெரிகிறது?

நமக்குப் பெயரும் புகழும் வருவதற்கு, நாம் எடுத்த காரியங்கள் வெற்றி அடையத்தான் வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. தோல்வியிலும் அவை நமக்கு வரக்கூடும்!

நாம் ஒவ்வொருவரும் இந்த உலகில் சில காரியங்களைச் செய்து முடிப்பதற்கு என்றே பிறந்து இருக்கிறோம். அவற்றைச் செய்து முடிக்காமல் நாம் இறக்கப் போவது இல்லை ஆனால், அந்தக் காரியங்கள் யாவை என்பது

நமக்குத் தெரியாது. காரணம், நாம் முன்னமேயே சொன்னது போல் நாம் எல்லாரும் சிற்றறிவு படைத்தவர்கள். இறைவனைப் போல் பேரறிவு படைத்தவர்கள் அல்லர்.

ஓர் ஆசாரியின் கையில் உளியும் கொட்டாப்புளியும் இரம்பமும் இழைப்புளியும் கருவிகளாக விளங்குவதுபோல, இறைவன் கையில் உயிர்கள் அனைத்தும் கருவிகளாகப் பயன்படுகின்றன. ஆனால், உளியும் கொட்டாப்புளியும் அறிவுப் பொருள்கள் அல்ல. அறிவு அற்ற சடப்பொருள்கள். எனவேதான், 'நான் இந்த நாற்காலியை உருவாக்கினேன். அந்தப் பலகையை இழைத்தேன்' என்று அவை எண்ணிக் கொள்வதில்லை.

உயிர்கள் அறிவுப் பொருள்கள். ஆகையால், 'நான் அந்தக் காரியத்தைச் செய்தேன். இந்தக் காரியத்தைச் செய்யாமல் விட்டுவிட்டேன்' என்று எண்ணிக் கொள்கின்றன. உண்மையில் ஒரு காரியத்தைச் செய்வதும் செய்யாமல் இருப்பதும் நம் கையில் இல்லை. அது இறைவன் கையில் தான் இருக்கிறது. இருந்தாலும், நாம் இறைவன் கைக் கருவிகள் என்ற பேருண்மையை உணராமல் எதையும் நம் விருப்பம்போல் நாமே செய்து முடிப்பதாகக் கருதிக் கொள்கிறோம்.

**இறைவன்**
**திருவுள்ளப்படியே**
**எல்லாம்**
**நடக்கின்றன!**

கொலம்பஸ் என்பவரது விருப்பம், இந்தியாவுக்கு ஒரு கடற்பாதை கண்டுபிடிக்க வேண்டும் என்பது. ஆனால், இறைவனது விருப்பம் அவர் அமெரிக்காவைக் கண்டுபிடிகக

வேண்டும் என்பது. இதில் இறைவனுடைய விருப்பந்தான் நடைபெற்றது. கொலம்பஸின் விருப்பம் நடைபெறவில்லை. இறைவனது விருப்பம் நிறைவேறுவதற்கு, அவர் கொலம்பஸை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டார். அவ்வளவுதான்.

அமெரிக்கா இன்று உலகிலேயே தலைசிறந்த ஒரு வல்லரசாகத் திகழ்கிறது. உலக நாடுகளின் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் ஓரளவு நிருணயிக்கக்கூடிய ஒரு மாபெரும் சக்தியாக அது விளங்கிக்கொண்டிருக்கிறது. அமெரிக்காவின் தலையீட்டினால்தான் இரண்டாவது உலகப் போரின் போக்கிலேயே ஜனநாயகத்துக்குச் சாதகமான ஒரு மாறுதல் ஏற்பட்டது. போரில் வீழ்ச்சியுற்ற மேற்கு ஐரோப்பிய நாடுகள் எல்லாம், அமெரிக்காவின் பொருளாதார உதவியினால் தான் இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றன. அமெரிக்க உதவியைப் பெறாத நாடுகள், இந்த உலகிலேயே மிகச் சில தாம் இருக்கக் கூடும். இன்று உலகு எங்கிலும் மின்சார விளக்குகள் எரிகின்றன. திரைப்படங்கள் ஓடுகின்றன. இசைத்தட்டுகள் பாடுகின்றன. இவற்றை எல்லாம் கண்டுபிடித்தவர் ஓர் அமெரிக்க விஞ்ஞானி என்பது அந்த நாடே பெருமைப்படக் கூடிய ஒரு சங்கதி அல்லவா?

உலக நிகழ்ச்சிகளின் போக்கையே உருவாக்கக்கூடிய ஒரு மாபெரும் சக்தியாக இன்று அமெரிக்கா விளங்கிக் கொண்டிருக்கிறது. இத்தகைய சக்தியொன்று இப்போது தேவை என்பதை அப்போதே உணர்ந்திருந்தவர் கொலம்பஸ் அல்லர். அப்படி உணர்ந்திருந்தவர் ஒருவர் உண்டு என்றால், அவர் பேரறிவாளனாகிய இறைவனைத் தவிர வேறு எவராகவும் இருக்க முடியாது. அப்படி உணர்ந்திருந்தமையால் தான், அவர் கொலம்பஸுக்கு அமெரிக்காவைக் காட்டிக்கொடுத்தார். உடனே கொலம்பஸ் அதைக் கண்டுபிடித்தார்!

அதற்கு முன்னால், அமெரிக்கா என்ற ஒரு கண்டம் இருக்கிறது என்பதே கொலம்பஸுக்குத் தெரியாது. எனவே

அவர் கண்டு பிடிக்க ஆசைப்பட்டிருக்கவும் முடியாது. இந்தியாவுக்குப் புதிய வழி கண்டு பிடிக்க வேண்டும் என்பது தான் கொலம்பஸின் ஆசை. அந்த ஆசையை அவர் உள்ளத்தில் கிளறிவிட்டவனும் இறைவன்தான். ஏன் அப்படிக் கிளறி விட்டான்? அதை நிறைவேற்றுவதற்காகவா? அல்ல; அமெரிக்காவைக் கொலம்பஸ் கண்டறிவதற்காக.

மனித இனம்
ஓர்
அடிப்படையான
அறியாமையில்
ஆழ்ந்து கிடக்கிறது!

அமெரிக்கா என்ற ஒரு செல்வக் களஞ்சியம் இருப்பது உலக மக்களுக்கு அதுவரையில் தெரியாமல் இருந்தது. அதை அவர்களுக்குக் காட்டிக்கொடுக்க வேண்டும் என்று இறைவன் திருவுள்ளம் கொண்டான். ஆனால், அந்தத் திருவுள்ளத்தை அவன் நேரடியாகச் சென்று கொலம்பஸிடம் கூறவில்லை. அப்படிக் கூறுவது இறைவனுக்கு வழக்கம் இல்லை. அதற்குப் பதிலாக, அவன் கொலம்பஸின் உள்ளத்தில், இந்தியாவுக்கு வழி கண்டு பிடிக்கவேண்டும் என்ற ஒரு புதிய ஆசையைக் கிளறிவிட்டான். அந்த ஆசையால் உந்தப்பட்ட கொலம்பஸ், ஒரு கப்பலை எடுத்துக்கொண்டு கடலில் பயணம் புறப்பட்டார். கொலம்பஸ் எங்கெல்லாமோ சுற்றிவிட்டு, எப்படி எப்படி எல்லாமோ துன்பப்பட்டுவிட்டு, கடைசியாக அமெரிக்காவின் கரையை வந்து அடைந்தார்.

அப்படி அடைந்த பின்பு, 'ஐயோ, நான் வந்து அடைந்த இடம் இந்தியா அல்லவே' என்று அவர் அழுது புலம்புவாரானால், அதை அவருடைய பேதைமைத்தனம் என்பதைத் தவிர வேறு என்ன சொல்வது? 'நாம் ஒரு புதிய உலகத்தையே

வைக் கையாலேயே தூக்க முடியாது. கைப்பிடி (Handle bar) இல்லாத சைக்கிளில் சவாரி செய்யவே முடியாது. எந்தக் கருவியையும் அதன் கைப்பிடியைக் கொண்டுதான் நாம் பயன் படுத்திக் கொள்ள முடிகிறது. நாம் எல்லாம் இறைவனுடைய கருவிகள் அல்லவா? அப்படியானால், அவன் பயன்படுத்திக் கொள்வதற்கு நம்மிடத்திலும் ஒரு கைப்பிடி இருக்க வேண்டுமே?

இருக்கிறது, அதுதான் ஆசை எனப்படுவது.

நாம்
எந்த நேரமும்
இலாபம்
இல்லாத
சிந்தனையிலேயே
ஈடுபட்டு
இருக்கிறோம்!

நம்முடைய ஆசைகளைக் கிளறிவிட்டுத்தான், இறைவன் தன்னுடைய காரியங்களை நிறைவேற்றிக் கொள்கிறான். ஆசையால் உந்தப்பட்ட நாம், காரியங்களில் ஈடுபடுகிறோம். ஆனால், அந்தக் காரியங்களால் விளையவேண்டிய பயன் என்ன என்பது இறைவனால்தான் தீர்மானிக்கப்படுகிறது. அதனால் தான் ''காரியத்தைச் செய். அதன் பயனைப்பற்றிச் சிந்திக் காதே'' என்கிறது பகவத்கீதை.

ஆமாம். நமது காரியங்களின் பயனை இறைவனே தீர்மானிக்கிறான் என்னும்போது, அதைப்பற்றி நாம் சிந்திப் பதில் இலாபம் என்ன?

ஆனால், இந்த இலாபம் இல்லாத சிந்தனையில்தான் நாம் எந்த நேரமும் ஈடுபட்டு இருக்கிறோம். ஒரு காரியத்தில்

நாம் எதிர்பார்த்த பயன் கிடைக்கும்போது, மகிழ்ச்சி அடைகிறோம். எதிர்பார்த்த பயன் கிடைக்காதபோது, வருத்தம் அடைகிறோம். அந்த மாதிரி வருத்தங்கள் நமக்கு வராமல் இருக்கவேண்டும் என்பதற்காக, நாம் இறைவனைப் பிரார்த்தனை செய்கிறோம். 'இறைவா! நான் புழுவைக் கவ்வி விழுங்க வேண்டும்; அதே நேரத்தில், தூண்டில் முள்ளிலும் மாட்டிக் கொள்ளாமல் இருக்கவேண்டும்' என்று பிரார்த்தனை செய்ததாம் ஒரு மீன். அதுபோன்றதுதான் நம்முடைய பிரார்த்தனையும்!

ஒரு மோட்டார் காரின் சக்கரம், தன் பொருட்டா சுழலுகிறது! அல்ல. அதை ஓட்டிச் செல்லும் உரிமையாளனின் பொருட்டு!

ஒரு மாடு, தன் பொருட்டா வயலில் கலப்பையை இழுத்துச் செல்லுகிறது? அல்ல. அதன் உரிமையாளனாகிய உழவனின் பொருட்டு!

ஒரு பம்பரம், தன்னுடைய மகிழ்ச்சிக்காகவா தரையில் சுழல்கிறது? அல்ல. அதன் உரிமையாளனாகிய சிறுவனின் மகிழ்ச்சிக்காக!

ஒரு நாய், தன் பொருட்டா திருடனைத் துரத்துகிறது? அல்ல. அதன் உரிமையாளனின் பொருட்டு.

இதே போல,

நாமும் இந்த உலகில் பல காரியங்களைச் செய்து கொண்டிருப்பது நம் பொருட்டு அல்ல. நமக்கு எல்லாம் தனிப்பெரும் தலைவனாக விளங்கும் இறைவன் பொருட்டு!

உண்ட உணவு செரிக்காததால் ஒருவனுக்கு வயிற்றுவலி ஏற்படுகிறது.

வயிற்றில் உணவே இல்லாததால் இன்னொருவனுக்கு வயிற்று வலி ஏற்படுகிறது.

இருவரும் ஒரு மருத்துவ நிபுணரிடம் போகிறார்கள்.

முதல் வயிற்றுவலிக்காரனிடம், 'நீ எதுவும் சாப்பிடாமல் பட்டினி கிடக்க வேண்டும். அப்போதுதான் உன் வலி நீங்கும்' என்று அவர் சொல்லுகிறார்.

இரண்டாவது வயிற்றுவலிக்காரனிடம், 'உன் வயிற்றில் புளிப்பு நீர் மிகுந்து இருக்கிறது. ஆகையால் நீ எந்தக் காலத்திலும் பட்டினி கிடக்கக் கூடாது. பட்டினி கிடந்தால் உனக்கு வலி வந்துவிடும். ஆகையால், இப்போதே போய் ஏதாவது கொஞ்சம் நல்ல உணவைச் சாப்பிடு. உடனே உனக்கு வலி நீங்கிவிடும்' என்கிறார் அவர்.

அதாவது ஒருவனைப் பட்டினி போடு என்கிறார்; இன்னொருவனைப் பட்டினி போடாதே என்கிறார். இருவரும் வயிற்றுவலிக்காரர்கள்தாம். ஆனால், இருவருக்கும் இரு வேறு வகையான அறிவுரைகளைக் கூறுகிறார் ஒரே மருத்துவ நிபுணர். காரணம், வயிற்றுவலி என்பது பெயர் அளவில் ஒரே நோயாகக் காணப்பட்டாலும், அந்த நோய் தோன்றியுள்ள வயிறுகளின் தன்மைகள் இரு வேறு வகையாக இருக்கின்றன. ஒரு வயிற்றில் அக்கினி மந்தம்; இன்னொரு வயிற்றில் புளிப்பு நீர் மிகுதி. இரண்டுக்கும் ஒரே மாதிரியான மருத்துவத்தைக் கையாள முடியாது. அதனால்தான், மருத்துவ நிபுணரின் அறிவுரைகளும் இரு வேறு வகையாக இருக்கின்றன.

அதே போல,

## ஆளுக்குத் தக்க அறிவுரை உண்டு

வாழ்க்கையில் நாம் அடைகிற துன்பங்கள், துயரங்கள், இன்னல்கள், இடையூறுகள் இவை எல்லாம் பெயர் அளவில் ஒன்று போலவே இருந்தாலும் அவற்றை அனுபவிக்கிற உள்ளங்களின் இயல்புகள் ஒரே மாதிரியானவை அல்ல. அவை வெவ்வேறானவை. அந்த வெவ்வேறான மன இயல்புகளுக்குத் தக்கபடியே, அற நூல்களும் வெவ்வேறு வகையான அறிவுரைகளைக் கூறுகின்றன. அற நூல்களின் அறிவுரைகளில் மேலெழுந்தவாரியாகக் காணப்படுகிற முரண் பாடுகளுக்கு இதுவே அடிப்படைக் காரணம்.

''வாழ்க்கையில் எனக்குப் பொன் வேண்டும், புகழ் வேண்டும். அது வேண்டும், இது வேண்டும்'' என்று ஆசைப் படுபவர்களை நோக்கி, 'அப்படியானால் நீ முயற்சி செய், முயற்சி செய், இடைவிடாது முயற்சி செய்' என்று ஊக்கு விப்பதுதான் பெரியோர்களின் இயல்பு. அற நூல்களின் இயல்பும் அதுவே.

என்னுடைய முயற்சிகள் சில சமயங்களில் வெற்றியில் முடிகின்றன. சில சமயங்களில் தோல்வியில் முடிகின்றன. இதற்கு என்ன செய்வது?' என்று தயங்கிக் கொண்டிருப் பவர்களை நோக்கி, 'வெற்றி தோல்விகளைப்பற்றிக் கவலைப் படாமல், உன்னுடைய முயற்சிகளை நீ செய்துகொண்டே இரு' என்று கூறுகின்றன அற நூல்கள்.

'நாம் என்ன முயற்சி செய்தாலும் முடிவில் எல்லாம் இறைவன் திருவுள்ளப்படிதான் நடக்கும்போல் இருக்கிறது' என்று கருதத் தொடங்குபவர்களை நோக்கி, 'உண்மைதான், நீ முயற்சி செய்ய விரும்புவதுகூட உன் கையில இல்லை. அதுவும் அந்த இறைவன் கையில்தான் இருக்கிறது' என்று அறிவுறுத்துகின்றன அற நூலகள்.

இதேபோல்,

'இன்பம் துன்பம் இவ்விரண்டுமே என்னுடைய நன்மைக்காகத்தான் இறைவனால் அருளப்படுகின்றன என்னும்போது, அந்த இன்பத்தை அடைவதற்காகவும் துன்பத்தைத் தவிர்ப்பதற்காகவும் நான் எதற்காக முயற்சி செய்ய வேண்டும்? இன்பம் துன்பம் இவ்விரண்டையுமே மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ள நான் காத்திருக்கிறேன்' என்று சொல்லுபவர்களை மட்டுமே நோக்கி, 'அப்படியானால் நீ எந்த முயற்சியுமே செய்யவேண்டாம். ''சும்மா இரு என்று சொல்லுகின்றன அற நூல்கள்.

**சும்மா இருக்கும்**

**தகுதி உடையோர்**

**யார்?**

'சும்மா இரு. மௌனமாய் இரு' என்னும் அறிவுரைகள், குழம்பில் உப்புக் குறைவாய் இருக்கிறது என்பதற்காக மனைவியைக் கோபிப்பவர்களுக்கு உரியவை அல்ல.

தான் எடுத்த காரியத்தை முடிக்காவிட்டால் எதிரி நகைப்பானே என்று அஞ்சுபவர்களுக்கு உரியவை அல்ல.

'என்னை மதிக்காதவனை நான் மிதிக்காமல் விட மாட்டேன்' என்று வஞ்சினம் கூறுபவர்களுக்கு உரியவை அல்ல.

பட்டமும் பதவியும் எப்படி அடைவது என்று திட்டம் இடும் சூழ்ச்சியாளர்களுக்கு உரியவை அல்ல.

'எப்படியாவது முதலில் பொருளைத் தேடிக்கொள். பிறகு இறைவனைத் தேடிக்கொள்ளலாம்' என்று சொல்லு பவர்களுக்கு உரியவை அல்ல.

'என் மனைவியைவிட இன்னொரு பெண் அழகாய் இருக்கிறாள். ஆகையால், அந்தப் பெண்ணை நான் மறுமணம் செய்து கொண்டால் என்ன?' என்று எண்ணுபவர்களுக்கு உரியவை அல்ல.

வழியில் மழை வந்துவிட்டால், 'கையில் குடை எடுத்து வராமல் போய்விட்டோமே' என்று கவலைப்படுபவர்களுக்கு உரியவை அல்ல.

தன்னை ஒருவர் புகழும்போது மகிழ்ச்சியும், இகழும் போது வருத்தமும் அடையும் மனப்பான்மை படைத்தவர்களுக்கு உரியவை அல்ல.

'எனக்கு அது வேண்டும், இது வேண்டும்' என்று ஆசைப் படுபவர்களுக்கு உரியவை அல்ல.

சுருக்கமாகச் சொன்னால்,

'வாழ்வில் எனக்கு இன்பங்களே வரவேண்டும். துன்பங்களே வரக்கூடாது' என்னும் கருத்து உடையவர்களை நோக்கி, 'சும்மா இரு, மௌனமாய் இரு' என்ற அறிவுரைகள் சொல்லப்படவில்லை.

இன்பம் துன்பம் இரண்டையும் சமமாக மதிப்பவர்களுக்கு

இன்பம் வரப்போகிறது என்றால் உள்ளம் துள்ளுவதும் துன்பம் வரப்போகிறது என்றால், உள்ளம் துவளுவதும் இல்லாதவர்களுக்கு,

இன்பம் துன்பம் எது வரினும் அதை அமைதியோடு வரவேற்கத் தக்க பரிபக்குவம் உடையவர்களுக்கு,

இன்பத்தைப் பெருக்கிக்கொள்வதற்கும், துன்பத்தை விலக்கிக்கொள்வதற்கும் சிறிதும் விருப்பம் கொள்ளாத பெரியோர்களுக்கு,

உலகில் கோடிக்கு ஒருவரைக்கூடக் காண்பது அரிது என்று கூறத்தக்க இத்தகைய மேலோர்களை நோக்கியே, 'சும்மா இரு' 'மௌனமாய் இரு' என்னும் அறிவுரைகள் சொல்லப்பட்டு உள்ளன.

அவற்றை நீங்களும் நானும் நமக்கு உரியவை என்று எடுத்துக்கொள்ளக் கூடாது.

அது போன்றே,

'நமது குறைபாடுகளைப் போக்கிக்கொள்ளும் பொறுப்பு நம்மைச் சேர்ந்தது அல்ல. நம்மை நிறைவு உடையவர்கள் ஆக்கும் பொறுப்பு இறைவனைச் சேர்ந்தது' என்னும் தத்துவச் சட்டையை, எல்லாரும் எடுத்து மாட்டிக்கொள்ள முடியாது. அது எல்லாருக்கும் பொருந்தாது.

சிற்பியின் கையில் உள்ள ஒரு சிற்றுளியைப் போல, நானும் இறைவன் கையில் உள்ள ஒரு சிறு கருவியே' என்னும் உணர்வு எப்போது நமக்கு உண்மையிலேயே உண்டா கிறதோ, அப்போதுதான் அந்தத் தத்துவச் சட்டையை நம்மால் மாட்டிக்கொள்ள முடியும். அப்போதுதான் அது நமக்குப் பொருந்துவதாக இருக்கும்.

**ஆத்திகமும்**
**நாத்திகமும்**
**நம்மை**
**ஆட்கொள்வது**
**எப்படி?**

'இவ்வுலகில் நடைபெறும் காரியங்கள் எல்லாம் இறைவனா லேயே நடைபெறுகின்றன. நாம் எல்லாரும் அவனுடைய வெறும் கருவிகளே' என்னும் உண்மையை நம்முடைய அறிவு ஏற்றுக்கொள்ள வேண்டுமானால, அது ஒரு மிக மிகத் தெளி

வான அறிவாகப் பக்குவப்பட்டு இருக்க வேண்டும். அத்தகைய ஒரு பக்குவம் ஏற்படுவதற்கே, பல கோடிப் பிறவிகள் எடுத்தாக வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அப்படிப் பக்குவப்படா விட்டால், உயரிய உண்மைகளைக்கூட 'இது பகுத்தறிவுக்குப் பொருத்தமானது அல்ல' என்று நாம் எளிதில் உதறித் தள்ளி விடும் இயல்பு படைத்தவர்களாகவே வாழ்ந்துகொண் டிருப்போம்.

இன்று எதையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமானால், முதலில் அது நம் அறிவுக்குப் பொருத்மானதாய் இருக்க வேண்டும். ஆனால், சில சமயங்களில் அறிவுக்குப் பொருத்தம் இல்லாதவற்றையும்கூட மக்கள் நம்புகிறார்களே என்கிறீர்களா? அதுதான் மூட நம்பிக்கை எனப்படுவது!

அறிவின் வளர்ச்சி குன்றியிருக்கும் நிலையில்தான் மனிதன் மூட நம்பிக்கைகளுக்கு ஆளாகிறான். பிற்பாடு அறிவு வளர வளர, அந்த மூட நம்பிக்கைகளும் அவனை விட்டு அகன்று விடுகின்றன. சில நண்பர்கள் தம் இளமைக்காலத்தில் மிகவும் தெய்வபக்தி உடையவர்களாய் இருந்து, வயது ஆக ஆக நாத்திகர்களாய் மாறிவிடுவதை நாம் காண்கிறோம் அல்லவா? அதற்குக் காரணம் இதுதான்.

அப்படியானால் நாத்திகக் கொள்கைதான் முடிவான உண்மையா என்று கேட்கிறீர்களா?

அல்லவே அல்ல. இறைவன் ஒருவன் உண்டு என்னும் ஆத்திகக் கொள்கைதான் முடிவான உண்மை. இறைவன் என ஒருவன் இல்லவே இல்லை என்னும் நாத்திகக் கொள்கை முடிவான உண்மை அல்ல.

ஆனால், வெறும் மூட நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட ஆத்திகக் கொள்கை நிலையானதாய் இராது. அறிவு வளர்ச்சியால் மூட நம்பிக்கை தகர்க்கப்படும் பொழுது, அதனோடு கூடவே அந்த ஆத்திகக் கொள்கையும் தகர்ந்து

போய்விடும். அதன் இடத்தை நாத்திகக் கொள்கை வந்து பிடித்துக் கொள்ளும்.

ஆனால், அதுகூட, அறிவு வளர்ச்சியின் ஒரு தொடக்கக் கட்டமே. அறிவு அதற்கு மேலும் வளர்ச்சி அடையும் போது, அந்த நாத்திகக் கொள்கையும் மெதுவாக நழுவிப் போய்விடும். அதன் இடத்தை, மூட நம்பிக்கையை அடிப்படையாகக் கொள்ளாமல், அறிவின் தெளிவையே அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆத்திகக் கொள்கை வந்து பற்றிக்கொண்டு விடும். இப்படி இரண்டாவது தடவையாக வந்து நம்மை ஆட்கொள்ளுகிற ஆத்திகக் கொள்கையை ஆயிரம் காரல் மார்க்ஸுகளும், பதினாயிரம் இங்கர்சால்களும் படை எடுத்து வந்தாலும் அசைத்துவிட முடியாது. காரணம், அந்த இரண்டாவது ஆத்திகக் கொள்கையானது, காரல் மார்க்ஸ்களாலும் இங்கர்சால்களாலும் கனவிலும்கூடச் சிந்தித்துப் பார்க்கப் படாத உயரிய பகுத்தறிவு வாதங்களையே அடிப்படையாகக் கொண்டதாகும்.

**உயிரோடு உயிராய் ஊறிவிட்ட கொள்கை**

ஆனால்,

அத்தகைய ஓர் உறுதியான ஆத்திகக் கொள்கைகூட, நம் அறிவால் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் அளவில் நின்று விட்டால் போதாது. அப்படி நின்றுவிடுமானால் நாம் உண்மையான ஆத்திகர்கள் ஆகிவிடமாட்டோம். நமது அறிவையும் கடந்து சென்று நம் உயிரிலேயே ஊறவேண்டும் அந்த ஆத்திகக் கொள்கை. அப்போதுதான் நாம் உண்மையான ஆத்திகர்கள் ஆவோம்.

உண்மையான ஆத்திகர்கள் மட்டுமே, 'நம்மைக் காப்பாற்றும் பொறுப்பு இறைவனைச் சேர்ந்தது' என்னும் தத்துவச் சட்டையை எடுத்து மாட்டிக்கொள்ள முடியும்.

ஒரு கொள்கையானது உயிரில் ஊறுவது என்றால் என்ன? எந்தக் கொள்கையையும் உயிரில் ஊற வைப்பது எப்படி?

அறிவால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு கொள்கையை வாழ்க்கையின் சிறுசிறு நிகழ்ச்சிகளிலுங்கூடப் பொருத்திப் பார்க்கும் இடைவிடாத மனப்பயிற்சியில் ஈடுபட்டு இருப்பதே, அக் கொள்கையை உயிரில் ஊற வைப்பது என்பதன் பொருளாகும். ஆனால், அப்படிச் சொல்லுவதை விட, நம் உயிரையே அக்கொள்கையில் ஊற வைப்பது என்று கூறுவது இன்னும் பொருத்தமாய் இருக்கும் என எண்ணுகிறேன்.

எல்லாம் இறைவன் செயல் என்னும் கொள்கையையே எடுத்துக்கொள்வோம். இறைவன் நம்மைப் போல் ஒரு மனித உருவை எடுத்துக்கொண்டுதான் எந்தக் காரியத்தை யும் செய்ய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அதே சமயத்தில், எல்லாம் வலல அந்த இறைவன், மனித உருவோ அல்லது வேறு வடிவங்களோ எடுக்கக்கூடாது என்ற சட்டமும் கிடையாது. ஆனால், பொதுவாக, சும்மா எண்ணுவதன் மூலமாகவே அவன் எல்லாக் காரியங்களையும் நிகழ்த்திவிடும் இயல்பு உடையவன். அந்த எண்ணத்தைத் தான் 'இறைவனது சங்கல்பம்' என்ற பெயரால் குறிப்பிடு கிறார்கள்.

இறைவனது சங்கல்பம் அல்லது திருவுள்ளமானது, உயிர்களுடைய உணர்விலே எதிரொலிக்கும்போது, அந்த எதிரொலியை அவை தம்முடைய ஆசைகள் என்று தவறாக எண்ணிக்கொள்கின்றன. அந்த ஆசைகளை நிறை வேற்றிக் கொள்வதற்காக அவை செயலில் இறங்குகின்றன. ஆனால், அதிலும் உயிர்களுக்குச் சுதந்தரம் கிடையாது. எந்த ஆசையை எப்படி நிறைவேற்றிக் கொள்வது, அதற்கு எத்தகைய செயலில் ஈடுபடுவது என்பவை எல்லாம்கூட இறைவனாலேயே நமக்கு வகுத்து அளிக்கப்படுகின்றன.

அவன் ஆட்டி வைக்கிறான். நாம் ஆடுகிறோம். அவன் அடக்கி வைக்கிறான். நாம் அடங்குகிறோம். அவ்வளவு தான்.

உள்ளத்தின்
உள்ளேயே
நிகழவேண்டிய
உணர்வுகள்

இந்த உண்மையை நமது ஒவ்வொரு செயலிலும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். நாம் ஒரு காரியத்தைச் செய்து முடித்துவிட்டதாகப் பிறர் நம்மைப் புகழும்போது, அதை வெளிப் பார்வைக்கு நாம் ஏற்றுக்கொண்டாலும், நம் உள்ளத்தின் உள்ளே 'இறைவா! இந்தக் காரியம் என்னால் செய்யப்பட்டது அல்ல. உன்னால் செய்யப்பட்டது. ஆகையால், இந்தப் புகழுரைகளும் எனக்கு உரியவை அல்ல. உனக்கே உரியவை' என்ற உணர்வு நமக்கு இருக்க வேண்டும்.

அதேபோல,

நாம் ஒரு காரியத்தில் தோல்வி அடைந்து, அதற்காகப் பிறர் நம்மைப் பழி தூற்றும்போது, 'இறைவா! எல்லாம் உன் செயல்' என்னும்போது, இந்தத் தோல்விமட்டும் என் செயலால் ஏற்பட்டது அல்ல. நான் தோல்வி அடைய வேண்டும், அதற்கு உரிய பழியையும் சுமக்க வேண்டும் என்பது உன் திருவுள்ளம்போல் இருக்கிறது. இந்தத் தோல்வியையும் பழியையும் என்னுடைய நன்மைக்காகவே நீ தந்திருப்பாய் என்பதில் எனக்கு அணுவத்தனையும் ஐயம் இல்லை. ஆகையால், அவற்றை நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறேன்' என்று நம் உள்ளம் அமைதியுற வேண்டும்.